**இராமநாதபுரம் நகராட்சி**

**இராமநாதபுரம் நகராட்சியில் 2022 மார்ச் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 28.03.2022–ந் தேதி காலை 10.00 மணிக்கு நகர்மன்றத்தலைவர் இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-**

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | **நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**<br>தமிழகத்தில் நடைபெற்று முடிந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2022-ல் அமோக வெற்றியை பெற வைத்து எங்கள் அனைவரையும் இந்த மாண்புமிகு மன்றத்தில் பதவியேற்க வைத்த மாண்புமிகு மரியாதைக்குரிய தமிழக முதல்வர் பேரன்புமிக்க தலைவர் அவர்களுக்கு இராமநாதபுரம் நகர் மன்றத்தின் வாயிலாக முதற்கண் நன்றி பாராட்டுதலையும் வணக்கத்தையும் அனைத்து மன்ற உறுப்பினர்கள் சார்பில் தெரிவித்து பதிவிடப்படுகிறது. | **தீர்மானம் எண்.1**<br>மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து ஏகமனதாக<br><br>தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. |
| பொருள் எண்..2 | **நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**<br>இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தேவிப்பட்டிணம் ரோட்டில் அமைந்துள்ள பேறறிஞர் அண்ணா அவர்களின் சிலை அருகில் மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர்.கலைஞர் அவர்களின் திருவுருவ சிலையை அமைக்க மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி செயல்படுத்திட அனுமதி வேண்டப்படுகிறது | **தீர்மானம் எண்.2**<br>**அரசுக்கு கருத்துரு அனுப்ப அனுமதிக்கலாம்.** |
| பொருள் எண்..3 | **நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**<br>இராமநாதபுரம் நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையில் முழு ஈடுபாட்டுடன் பணிபுரிந்த முன்கள பணியாளர்களான, தூய்மை பணியாளர்கள், மருத்துவர்கள்,காவலர்கள், பத்திரிக்கையாளர்கள் அனைத்து தடுப்பு பணியாளர்களுக்கும் அவர்களை பாராட்டி கௌரவிப்பதோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்று ஒரு சில மாதத்திற்குள் கொரோனாவை முற்றிலும் ஒழித்து மக்களின் நல்வாழ்வுக்கு வழி வகுத்து மட்டுமின்றி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், நமக்கு நாமே | **தீர்மானம் எண்.3**<br>**ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | திட்டம், கலைஞர் குடிசை ஒழிப்பு திட்டம், கலைஞர் வீடு வழங்கும் திட்டம், பெண்கள் பேருந்து பயண திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களின் மூலமாக நகர்ப்புற வசதிகளை பெருக்கிவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி இம்மன்றத்தின் வாயிலாக நன்றி பாராட்டுதல்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. | |
| பொருள் எண்..4 | அ) இராமநாதபுரம் நகராட்சியில் 2021-2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டம் 2022-2023ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு தொகையை தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>ஆ) நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலுக்கான 60.00 இலட்சம் ரூபாய் செலவினத்தை தமிழ்நாடு தேர்தல் ஆணையத்திடமிருந்து பெற்ற ரூ.54,08,000/-யினை தவிர்த்து அதிகப்படியான தொகையினை பொது நிதியிலிருந்து ஈடு செய்து **கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலக குறிப்பு**- 1)அ மற்றும் ஆ விற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ஆ)மீதமுள்ள செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1036/2022/பி1 | **தீர்மானம் எண்.4**<br>**அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.** |
| பொருள் எண்..5 | இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் 7.10 MLD கொள்ளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரிய அறிவுறுத்தலின்படி Online Effluent Monitoring System அமல்படுத்த வேண்டி உள்ளதால் அதற்கான உத்தேச மதிப்பீடு **ரூ.43.76** லட்சத்திற்கும் இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரி தகுதி வாய்ந்த நபருக்கு ஒப்பந்தம் அளித்து பணியினை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** - 1)மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2)அதற்கான விளம்பர செலவினத்தை கழிவுநீர் நிதியிலிருந்து செலவழிக்கவும் அனுமதி வழங்கப்படுகிறது.<br>ந.க.எண்.1037/2022/இ1 | **தீர்மானம் எண்.5**<br>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள் எண்..6 | இராமநாதபுரம் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக 06.03.2019ந் தேதி அன்று தரம் உயர்த்தப்பட்டது. இராமநாதபுரம் நகராட்சி 33 வார்டுகளை உள்ளடக்கியதாகும். ஆனால் அருகில் அமைந்துள்ள ஊராட்சி, | **தீர்மானம் எண்.6**<br>**அலுவலகக் குறிப்பு** |

| | | |
|---|---|---|
| | பேரூராட்சிகளை இணைக்காமல் தற்போதைய நிலையிலேயே தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகராட்சி மாவட்ட தலைநகராக உள்ளதாலும், இதன் அருகில் அமைந்துள்ள புண்ணியஸ்தலங்களான இராமேஸ்வரம், திருப்புல்லாணி, தேவிப்பட்டிணம், சேதுக்கரை மற்றும் ஏர்வாடி தர்ஹா ஆகிய இடங்களுக்கு வந்து செல்லும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருவதாலும் இந்நகரின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, மேலும் இந்நகரின் அருகில் அமைந்துள்ள (1)பட்டிணம்காத்தான் ஊராட்சி (2)சக்கரக்கோட்டை ஊராட்சி, (3)சூரங்கோட்டை ஊராட்சி (4)அச்சுந்தன்வயல் ஊராட்சி, (5) இராஜசூரியமடை ஊராட்சி ஆகிய கிராம ஊராட்சிகளை இணைத்து நகர எல்லையை விரிவாக்கம் செய்ய ஏற்கனவே பிரேரணை அனுப்பப்பட்டு மேற்காணும் பகுதிகளை இணைக்காமல் தரம் உயர்த்தப்பட்டிருப்பது எவ்வித பலனும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, இந்நகராட்சியின் மக்கள் தொகை பெருக்கம், மாவட்ட தலைநகர் மற்றும் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் பட்டிணம்காத்தான், சக்கரக்கோட்டை,சூரன்கோட்டை, அச்சுந்தன்வயல், இராஜ சூரியமடை ஊராட்சிகளை இணைத்து நகராட்சியின் தரத்தினை உயர்த்தினால் இந்நகராட்சியின் வருமானம் உயர்வடையும் அதன் பொருட்டு அரசின் உதவியுடன் கூடிய பாதாள சாக்கடை திட்டம், குடி தண்ணீர் வசதி ஆகிய திட்டங்களை நிறைவேற்றிடவும் 70.62 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியினை மேற்படி ஊராட்சிகள் இணைக்காமல் சிறப்பு நிலையாக மாற்றப்பட்டது எவ்வித பலனும் அளிக்காத்தை மன்றத்தில் பதிவு செய்து மேற்படி ஊராட்சிகளை இணைக்க வலியுறுத்தி மன்றத்தின் வாயிலாக மீண்டும் அரசுக்கு கருத்துரு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** - மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது. உரிய பிரேரணை (1)பட்டிணம்காத்தான் ஊராட்சி (2)சக்கரக்கோட்டை ஊராட்சி, (3)சூரங்கோட்டை ஊராட்சி (4)அச்சுந்தன்வயல் ஊராட்சி, (5) இராஜசூரியமடை ஊராட்சி ஆகிய கிராம ஊராட்சிகளை இணைத்து நகர எல்லையை விரிவாக்கம் செய்ய அரசுக்கு அனுப்பவும் அனுமதி வழங்கப்படுகிறது. | **அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள் எண்..7 | இராமநாதபுரம் நகராட்சி சிறப்புநிலை, **6.33** ச.கி.மீட்டர் பரப்பளவும், **33** வார்டுகளை உள்ளடக்கிய ஒரு மாவட்ட தலைநகரில் அமைந்துள்ள நகராட்சியாகும். இதன் மக்கள்தொகை **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி **64257,** தற்போதைய மக்கள்தொகை **77950** மற்றும் **2025** ஆம் ஆண்டின் மக்கள்தொகை **81920.** | **தீர்மானம் எண்.7**<br>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

இந்நகராட்சியில் வார்டு எண்.30 (Ward-F, Block-4,T.S No.17) ல் 9900.00 ச.மீ பரப்பளவில் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள "B" Grade பேருந்து நிலையமானது ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (IDSMT) 1989ல் கட்டிட பணி துவங்கப்பட்டு 05.02.1992ல் இப்பணி முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

இப்பேருந்து நிலையத்தில் 26 பேருந்து Bay–க்களும், 42 வாடகை கடைகள், இருசக்கரவாகனம் நிறுத்துமிடம், 2 வாடகை உணவகங்கள்அமையப்பெற்று அதன்மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.31.88இலட்சம், வருவாய் நகராட்சிக்கு கிடைக்கப் பெறுகிறது. குடிநீர் வசதி, விளக்குவசதி, கழிப்பிடவசதி, பயணிகள்அமரும் இடம் மற்றும் தாய்மார்கள் பாலூட்டும் அறை ஆகியவற்றுக்கான செலவினங்கள் இத்தொகையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அவ்வப்போது சிறிய அளவிலான பழுது பார்க்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்நகரை ஒட்டியுள்ள நயினார் கோவில், இராமேஸ்வரம், திருப்புல்லாணி, உத்திரகோசமங்கை, தேவிப்பட்டிணம், ஏர்வாடி போன்ற புனித தலங்களுக்கு அதிகப்படியான மக்கள் உலகெங்கிலும் இருந்து புனிதயாத்திரை வந்து செல்கின்றனர். மேலும் மதுரை, திருச்சி ஆகிய பெருநகரங்களுக்கும் இப்பேருந்து நிலையத்திலிருந்து பயணிக்கின்றனர்.

இந்நிலையில் இப்பேருந்துநிலையம் கட்டப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகி விட்ட நிலையில் மழைநீர் தேங்கி அவ்வப்பொழுது மேற்கூறைபூச்சு பெயர்ந்து விழுவதும் அதனை சரிசெய்வதும் வாடிக்கையாகி வருகிறது. தமிழ்நாடு அரசின் உத்திரவின் படி இடிந்து விழும் நிலையிலுள்ளஅனைத்து கட்டுமானங்களையும் இடித்து அப்புறப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையிலும் ஸ்திரத்தன்மை அடிப்படையிலும் பேருந்து நிலையத்தை முழுவதுமாக அகற்றி பெருகி வரும் பயனாளர்களின் (மக்களின்) அடிப்படையிலும் 8200.00 ச.மீ பரப்பளவு கொண்ட நகராட்சி பராமரிப்பில் உள்ள சந்தையின் இடத்தினையும், அதனை ஒட்டியுள்ள பூங்கா மற்றும் இருசக்கரவாகனம் நிறுத்துமிடத்தையும் சேர்த்து 18000.00 ச.மீ பரப்பளவில் அடுக்குமாடி கடைகள் கொண்ட புதிய நவீன வசதிகளுடன் கூடிய பேருந்துநிலையம் அமைக்க ரூ.45.00 கோடி மதிப்பீட்டில் திட்டப்பிரேரணை தயார் செய்ய அனுமதியும் திட்டத்தின் அவசரஅவசியம் கருதி மாவட்ட தலைநகராக உள்ள பேருந்து நிலையத்தினை 50–Bayகொண்ட "அ " தரம் வாய்ந்த பேருந்து நிலையமாக மாற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களது வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்கவும் அதற்குரிய விரிவான

| | | |
|---|---|---|
| | அறிக்கை தயாரிக்க ஆகும் உத்தேச செலவினமான ரூ.10.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>– 1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**உடன் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்பந்தப்புள்ளி கோரி கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2332/2021/இ1** | |
| பொருள் எண்..8 | இராமநாதபுரம் நகராட்சி தற்பொழுது கோடை காலம் தொடங்கிவிட்டபடியாலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தினசரி வழங்கப்படும் குடிநீரின் அளவு குறைந்துவிட்டபடியாலும், நகர்ப்பகுதியில் குடிநீர் விநியோகத்தில் பிரச்சனைகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு வார்டு உறுப்பினர்களின் வேண்டுகோளை பரிசீலனை செய்து ஆழ்துளை விசைப்பம்புடன் கூடிய குடிநீர் தொட்டி மற்றும் சிறிய அடிகுழாய்கள் அமைத்து தரவும் ரூ.10.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** - மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.<br>2)முதற்கூட்டத்தில் முக்கிய பொருளான குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு மன்றம் ரூ.10.00 இலட்சத்தினை குடிநீர் நிதியில் செலவிட அனுமதி வழங்கப்படுகிறது.<br>ந.க.எண்.1038/2022/இ1 | **தீர்மானம் எண்.8**<br>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள் எண்..9 | இராமநாதபுரம் நகராட்சியில் தூய்மை பணியாளர்களின் குடியிருப்பு பகுதியான பெரியார் நகர் பகுதிகளில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் கழிவு நீர் குழாய்கள் சேதமடைந்து இருப்பதால் கழிவு நீர் குடியிருப்பை சுற்றி தேங்கியிருப்பதையும், ஜன்னல் கண்ணாடிகள் உடைந்திருப்பதை சரி செய்யவும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் தனது மாவட்ட ஆட்சியர் ஆய்வின் போது தெரிவித்துள்ளதை முன்னிட்டு மேற்படி பராமரிப்பு செலவினங்களை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.2.00(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**- மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2)SUC கணக்கிலிருந்து மேற்காணும் செலவினத்தை மேற்கொள்ளலாம். | **தீர்மானம் எண்.9**<br>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..10 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு-A பிளாக்-05, நகரளவு எண்.33 முகவை ஊரணியினை கட்டுமான பணி, கல்லினால் ஆன இருக்கை, மின்சார வசதி, விளையாட்டு பொருட்கள், கண்காணிப்பு கேமரா, செடி, கொடி மரம் நடுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டு ரூ.350 லட்சங்கள் உத்தேச மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் நிதியில் பிரேரனை அனுப்பி அதற்கான உத்திரவு டுபிட்கோ அப்ரைசல் ரிப்போர்ட் வரப்பெற்றுள்ளது. அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரவும் தேவைப்படும் ஆவணங்களை அவ்வப்போது சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு - 1)மன்றம் அனுமதிக்கலாம்.**<br>2)மேற்காணும் அலுவல் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையருக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1047/2022/இ1 | **தீர்மானம் எண்.10**<br>**அனுமதி வழங்கப்பட்டது.** |
| பொருள் எண்..11 | இராமநாதபுரம் நகராட்சியில் UPS மற்றும் பேட்டரிகள் பழுது ஏற்பட்டு கணினிகள் இயங்க முடியாத சூழ்நிலையில் அடிக்கடி மின்வெட்டு ஏற்பட்டு கணினிகள் பழுது ஏற்படுவதை தடுக்க ஏற்கனவே பழுதாகியுள்ள UPSயை பழுது நீக்க மற்றும் புதிய UPS 1 எண்ணம் மற்றும் புதிய பேட்டரிகள் 12 எண்ணம் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்கள் அறைக்கு புதிய ஒரு கணினி மற்றும் பிரிண்டர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00/- இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு-1,மன்றம் அனுமதிக்கலாம்<br>2,இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 2495/2021/இ1 | **தீர்மானம் எண்.11**<br>**அனுமதி வழங்கப்பட்டது.** |
| பொருள் எண்..12 | இராமநாதபுரம் நகராட்சியில் பிறப்பு / இறப்பு சான்றிதழ் வழங்கி வரும் சுகாதார ஆய்வாளர்களின் புதிய அறைக்கு புதியதாக UPS Line மற்றும் இன்டெர்னெட் வசதிகள் மற்றும் பிறப்பு / இறப்பு சான்றிதழ் வாங்க வரும் பொதுமக்கள் அமர இருக்கை வசதி, குடிநீர் வசதி (RO) செய்துதர ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.12**<br>**அனுமதி வழங்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு:<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1021/எச்1/2022 | |
| பொருள் எண்..13 | செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் மருந்துத்துறை சென்னை-6, அவர்களின் செயலாணை கடித ந.க.எண்.1869/NUHM/SHS/2015-3 நாள்.13.10.2021ன் படி இராமநாதபுரம் நகராட்சியின் நிர்வாகத்திற்குட்பட்ட பகுதியில் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட வரப்பெற்றுள்ள செயல்முறையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. மேற்படி கட்டிடத்தை நகராட்சி நிதியில் கட்ட அறிவுறுத்தியதின்படி இச்செலவினத்தை மேற்கொள்ள இயலாததால் NHRM நிதியில் கட்டிடம் கட்டவும், அதன் மீது உரிய தொழில் நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை எடுக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**- 1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2)மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தொழில் நுட்ப அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான விளம்பர செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவழிக்கவும் மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது.<br>**ந.க.எண்**.1048/2022/**எச்**1 | **தீர்மானம் எண்.13**<br>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள் எண்..14 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11531/2019/எச்1 நாள்.02.12.2021 சுற்றறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை WP(MD)No.4959/2019(மற்றும்) WP(MD)No.3941&3942/2019 நாள்.17.08.2021-ன்படி உள்ளாட்சி அமைப்புகள் மூலம் இயங்கப்படும் பொது கட்டண கழிப்பிடங்களை குத்தகைக்கு விடாமல்(NGO) தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அதனை தொடர்ந்து இந்நகராட்சி பாத்தியமான பொது கழிப்பிடங்களை மராமத்து பணி மேற்கொண்டு NGO தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கவும் நகராட்சிக்குட்பட்ட கட்டண கழிப்பிடங்களை குத்தகைக்கு விடாமல் NGO நிறுவனங்களிடம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பு நகல் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், | **தீர்மானம் எண்.14**<br>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3129/2021/அ2 | |

**(ஒப்பம்) கு.கார்மேகம்,**
**நகர்மன்றத்தலைவர்,**
**இராமநாதபுரம் நகராட்சி.**